பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
06. 01. 2025 **MONDAY** 7. 15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஏழைகளுக்கும் தரமான மருத்துவ சேவை கிடைக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் இன்று அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் திரு. **Jake Sullivan**-னுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

3. இந்தியா வலுவான பொருளாதார நாடாக உருவெடுத்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4. வடமாநிலங்களில் தொடர்ந்து கடும் குளிர் நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் தமிழக அணி வெற்றி பெற்றுள்ளது..

<<<<<<>>>>>>

நாட்டில் ஏழைகளுக்கும் தரமான மருத்துவ சேவை கிடைப்பதற்கு மத்திய அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லி, ரோஹ்னி பகுதியில் மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில் 185 கோடி ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டி அவர் பேசினார்.

ஆயுர்வேதம் உள்ளிட்ட இந்தியாவின் பாரம்பரிய மருத்துவமுறைகளை ஊக்குவிக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் மத்திய அரசு முனைப்புடன் உள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கோவிட் காலகட்டத்தில் உலக நாடுகள் பொருளாதார பின்னடைவை சந்தித்த போதிலும், இந்தியா வலுவான பொருளாதார நாடாக திகழ்ந்ததாக கூறினார்.

(சவுண்ட் பைட் - முருகன் 55 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

இந்தியா வந்துள்ள அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் திரு. **Jake Sullivan** புதுதில்லியில் இன்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவலை சந்தித்து பேச்சு நடத்துகிறார்.

பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்படவுள்ளது.

பின்னர், திரு. **Jake Sullivan,** வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கரை சந்தித்து பேசவுள்ளார்.

மேலும், தில்லி **IIT-** யில் நடைபெறும் நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்கிறார்.

<<<<<<>>>>>>

வெளிநாடுவாழ் இந்தியர் மாநாடு ஒடிஷா மாநிலத்தின் சிறப்புகளை உலகிற்கு எடுத்துக்காட்ட பெரும் வாய்ப்பாக அமையும் என்று அம்மாநில தலைமைச் செயலாளர் திரு மனோஜ் அகுஜா கூறியுள்ளார்.

புவனேஷ்வரில் நாளை மறுநாள் தொடங்கி, 10-ஆம் தேதிவரை மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டை, ஒன்பதாம் தேதியன்று பிரதமர் திரு நரேந்திர மோடி முறைப்படி தொடங்கி வைக்கவுள்ளார்.

பத்தாம் தேதி நடைபெறும் நிறைவு விழாவில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கலந்துகொள்கிறார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

மாநாட்டில் கலந்துகொள்ள 50-க்கும் மேற்பட்ட நாடுகளில் வசிக்கும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் மூவாயிரத்து 500 பேர் பதிவு செய்துள்ளனர்.

ஒடிஷாவில் இந்த மாநாடு முதல் முறையாக நடத்தப்படுவதன் மூலம், மாநிலத்தின் சுற்றுலா மற்றும் கலாச்சார சிறப்புகளை எடுத்துக்கூறும் வகையில், மாநில அரசு விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளதாக தலைமைச்செயலாளர் திரு மனோஜ் அகுஜா தெரிவித்துள்ளார்.

**<<<<<<>>>>>>**

மும்பை சத்ரபதி சிவாஜி விமான நிலையத்தில் மத்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் நடத்திய சோதனையில் சுமார் 75 லட்சம் ரூபாய் மதிப்பிலான போலி மருந்துப் பொருட்கள் மற்றும் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியாவிலிருந்து இந்தப் பொருட்களை சட்டவிரோதமாக கடத்தவிருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் நடத்தப்பட்ட சோதனையில், 74 ஆயிரம் மருந்து கேப்சூல்களும், 2 லட்சத்து 44 ஆயிரம் சிகரெட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

லண்டனுக்கு அனுப்புவதற்காக விமான நிலைய சரக்ககத்தில் இந்த பொருட்கள் வைக்கப்பட்டிருந்தது விசாரணையில் தெரியவந்தது.

**<<<<<<>>>>>>**

இந்தியா – செனகல் இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்தும் விதமாக ஐஎன்எஸ் - **Tushil** போர்க்கப்பல் செனகல் நாட்டின் **Dakar** துறைமுகத்தை சென்றடைந்துள்ளது.

இந்த கப்பல், இந்தியாவின் ஆயுத வலிமை, சென்ஸார் சாதனங்கள் மற்றும் கப்பலில் பொருத்தப்பட்டுள்ள பிற கருவிகளை காட்சிப்படுத்துவதுடன், மேற்கு ஆப்பிரிக்க கடற்பகுதியில் கூட்டுப் பயிற்சியிலும் ஈடுபடவுள்ளது.

இந்த பயிற்சி, இருநாட்டு கடற்படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு மற்றும் செயல்பாட்டை மேம்படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், செனகல் நாட்டைச் சேர்ந்த உடற்பயிற்சி ஆர்வலர்களுக்காக இந்திய கடற்படை வீரர்கள் யோகா பயிற்சியையும் மேற்கொள்ளவுள்ளனர்.

<<<<<<>>>>>>

தலைநகர் தில்லியில் காற்று தரம் சற்று மேம்பட்டிருப்பதை அடுத்து, காற்று தர மேலாண்மை நிலை-3ன் கீழ், பிறப்பிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

தேசிய தலைநகர் பிராந்தியத்தில் நேற்று காலை முதல் சாதகமான வானிலை நிலவுவதாலும், மழை காரணமாகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், நிலை-1 மற்றும் நிலை-2ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் தொடர்ந்து அமலில் இருக்கும் எனவும், காற்று தர மேலாண்மை ஆணையத்தின் துணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த கட்டுப்பாடுகள், தீவிரமாக செயல்படுத்தப்படுவதுடன் தொடர்ந்து கண்காணிக்கப்படும் என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

வடமாநிலங்களில் தற்போது நிலவும் கடும் குளிர் தொடர்ந்து நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு ஜம்மு காஷ்மீர், லடாக், கில்ஜித் உள்ளிட்ட பகுதிகளில், வெப்பநிலை 4 முதல் 5 டிகிரி செல்சியஸ் அளவிற்கு குறையக்கூடும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அதேவேளையில் ஹிமாச்சலப்பிரதேசத்தில் இன்று இடிமின்னனுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லி, பஞ்சாப், ஹரியானா, உத்தரபிரதேசம், ராஜஸ்தான் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு அடர் பனிமூட்டம் நிலவக்கூடும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

அமெரிக்காவில் கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவிற்கு கடும் குளிர் மற்றும் பனிப்பொழிவு நிலவுவதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டின் **Virginia, Kentucky** உள்ளிட்ட மாநிலங்களில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த குளிர் இம்மாதத்தில், நாட்டின் கிழக்கு பகுதிகளை நோக்கி செல்லக்கூடும் என்பதால், 30 மாகாணங்களில் உள்ள மக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

பாகிஸ்தானின் நீண்டகால வளர்ச்சிக்கு உதவும் வகையில், 20 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு நிதியுதவி வழங்க உலக வங்கி முடிவு செய்துள்ளது.

அந்நாட்டில் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கான பத்தாண்டு செயல்திட்டம் வரும் 14ஆம் தேதி தொடங்கப்படவிருப்பதை ஒட்டி, உலக வங்கி இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அன்றைய தினம், உலக வங்கியின் தெற்காசியாவுக்கான துணைத் தலைவர் திரு. **Martin Raiser** இஸ்லாமாபாதிற்கு நேரில் சென்று இந்த கடனுதவி தொடர்பான முறையான அறிவிப்பை வெளியிடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<<<>>>>>>

புதுச்சேரி அகில இந்திய வானொலி நிலைய நிகழ்ச்சி தொகுப்பாளரும், எழுத்தாளருமான திருமதி. உமா மோகன் உடல்நலக்குறைவு காரணமாக இன்று அதிகாலை காலமானார்.

<<<<<<>>>>>>

சிரியா மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடைகளை அகற்ற வேண்டும் என சிரியா வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Asaad Hassan Al-Shibani** வலியுறுத்தியுள்ளார்.

கத்தாரில் நேற்று அந்நாட்டு பிரதமரை சந்தித்த பின், அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் அமெரிக்காவின் தடை சிரியாவின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சிரியாவில் அரசியல் நிலைத்தன்மையை ஏற்படுத்தி, பொருளாதாரத்தை மீட்டெடுக்க உலக நாடுகள் உதவ வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த விவகாரத்தில் சர்வதேச ஆதரவை திரட்டும் விதமாக திரு. **Asaad Hassan Al-Shibani,** ஐக்கிய அரபு எமிரேட் மற்றும் ஜோர்டான் நாடுகளுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

<<<<<<>>>>>>

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் தமிழ்நாடு அணி, வெற்றி பெற்றுள்ளது.

ருர்கேலாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அந்த அணி, உத்தரபிரதேச அணியை 2-0 என்ற கோல்கணக்கில் வென்றது.

<<<<<<>>>>>>

பிரிட்டன் ஓபன் ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனஹத் சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

பெர்மிங்ஹாமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான அரையிறுதி ஆட்டத்தில் அவர், 9-11, 11-6, 11-8, 11-6 என்ற செட் கணக்கில், எகிப்தின் **Ruqayya Salem-**ஐ வென்றார்.

<<<<<<>>>>>>

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் தில்லியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கேரள அணி – பஞ்சாப் அணியை 1-0 என்ற கோல்கணக்கில் வென்றது.

கொல்கத்தாவில் இன்றிரவு மணி 7.30-க்கு நடைபெறும் ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<>>>>>>

அரியலூரில் நடைபெற்ற மாநில அளவிலான இறகு பந்து போட்டியின் இரட்டையர் பிரிவில் திருச்சி அணி சாம்பியன் பட்டம் வென்றது.

<<<<<<END>>>>>>